பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 18 புதன்கிழமை 03.09.2025 | அதிர்வு 33

## ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழா ஒத்திவைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு நிறைவு விழா, காலவரையின்றி ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

02



## 50 நாள்கள் அகழ்வில் 222 எலும்புக்கூடுகள்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது நான்கு மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் செம்மணிப் புதைகுழியில் கட்டம் கட்டமாக இடம்பெற்ற ஆய்வுகள் ஐம்பது நாள்களை எட்டியுள்ளன.

03

### இன அழிப்புக்குச் சான்றாகின்றது செம்மணி

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையைப் பரிந்துரையுங்கள்!

### இணை அனுசரணை நாடுகளுக்கு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டாகப் பரிந்துரை



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் இணை அனுசரணை நாடுகளால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் இலங்கை தொடர்பான புதிய பிரேரணை வரைவில் சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையின் ஊடாகப் பொறுப்புக் கூறலை வலுப்படுத்தல், ஆக்கபூர்வமான முறையில் இழப்பீடுகளை வழங்கல், மீள்நிகழாமையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அரசமைப்பு மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் ஆகிய 3 பிரதான கூறுகளை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான விடயங்கள் உள்ளடக்கப்படவேண்டும் என சர்வதேச நாடுகளில் இயங்கி வரும் 18 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணை அனுசரணை நாடுகளுக்கு கூட்டாகப் பரிந்துரைத்துள்ளன.

02

## இன்று இலங்கை வருகின்றார் இத்தாலியின் பிரதி அமைச்சர்



இத்தாலியின் வெளிவிவகார மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பிரதி அமைச்சர் மரியா திரிபோடி இன்று புதன் கிழமை இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்கின்றார்.

அவர் நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை வரை நாட்டில் தங்கியிருப்பார் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

சுமார் ஒரு தசாப்த காலத்துக்குப் பின்னர் இத்தாலியில் இருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்படும்

03

## கச்சதீவில் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம்



நெடுந்தீவு மற்றும் கச்சதீவை ஒன்றிணைக்கும் வகையிலான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று கடற்றொழில்,

03




செம்மணி புதைகுழி அகழும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வழி நடத்திய யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி பதவி உயர்வு வழங்கப்பட்டமை தொடர்பில் நான் நேற்று குறிப்பிட்ட கருத்து சம்பந்தமாக வடமராட்சியில் இருந்து சட்டத்தரணி ஒருவர் ஒரு குறிப்பை மின்னஞ்சலில் அனுப்பி இருந்தார்.

ஒரு சட்டத்தரணியாக அவர் குறிப்பிடுகின்ற விடயங்களில் அர்த்தங்கள் இருக்கின்றமையாலும், என்னுடைய நேற்றைய பத்தி தவறான கற்பிதத்தை தந்துவிடலாம் என்ற அவரது கருத்து மறுக்க முடியாதது என்பதாலும் அவர் குறிப்பிட்ட விடயங்களை அப்படியே

03

# பிரபல ரெப் பாடகரான மாதவ பிரசாத் மீண்டும் வெடிப்பொருள்களுடன் கைது!

சில நாட்களுக்கு முன்பு போலித் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட பிரபல ராப் பாடகர் 'மதுவா' என்றழைக் கப்படும் மாதவ பிரசாத் (வயது 26) மீண்டும் வெடிபொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கஹதுடுவ பொலிஸ் குற்றப் புல னாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசி யத் தகவலின் அடிப்படையில், சந்தேக நபர் பிட்டிபன, கலஹேன பகுதியில் உள்ள ஒரு வீட்டின் பின்னால் வெடி பொருட்களைப் புதைத்து வைத்திருந்தார் என்று தெரியவந்துள்ளது.

இதன்போது, 3 ஜெலட்டின் குச்சிகள், 5 டெட்டனேட்டர்கள் மற்றும் 3 கிலோ



கிராமும் 500 கிராம் அளவிலான அமோ னியா நைதரசன் இரசாயனமும் பொலி ஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த ஆகஸ்ட் 25 ஆம் திகதி சந் தேகநபர் போலித் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டு, கெஸ்பேவ நீதிவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பொலிஸார் சந்தேகநபரிடம் மேற் கொண்ட விசாரணையில், சில மாதங்க ளுக்கு முன்பு கொடவில பொலிஸாரிட மிருந்து துப்பாக்கியைத் திருடியதற் காக மன்னார் விசேட குற்றப் புலனாய் வுப் பிரிவால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள், மற்றொரு ராப் இசைக் கலைஞருடன் வந்து வெடிபொருட்களை வைத்திருப்பதற்காகக் கொடுத்ததாகத் தெரியவந்துள்ளது.

மேலும், இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சர்வதேச குற்றவியல்...**

இது குறித்து பிரித்தானியத் தமிழர் பேரவை, புதுடில்லி தமிழ்ச் சங்கம், ஜேர்மனி தமிழர் கொள்கைப் பேரவை, சுவிட்சர்லாந்து தமிழ் நடவடிக்கைக் குழு என்பன உள்ளடங்கலாக பிரிட்டன், பிரான்ஸ், இந்தியா, ஜேர்மனி, நெதர் லாந்து, கனடா, அயர்லாந்து, தென்னா பிரிக்கா, சுவிட்சர்லாந்து, மொரீஸியஸ் ஆகிய நாடுகளைத் தளமாகக்கொண்டு இயங்கி வரும் 18 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டிணைந்து இணை அனுசரணை நாடுகளின் பிரதிநிதிகள், பேரவையில் அங்கம் வகிக்கும் நாடு களின் பிரதிநிதிகள், கொள்கை வகுப் பாளர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு அனுப்பி வைத்திருக்கும் பரிந்துரை ஆவணத்தில் மேலும் கூறப்பட்டிருப்ப தாவது:-

"இலங்கை கடந்த ஏழு தசாப்த காலமாக தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பிலும், போர்க்குற்றங்களிலும், மனித குலத்துக்கு எதிரான மீறல்களிலும் ஈடுபட்டிருப்பதுடன் அதன் விளைவாக சுமார் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாட்டை விட்டு அகதிகளாகத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடுத் தடுத்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங் கள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் வெளி யிடப்பட்ட அறிக்கை உள்ளிட்டவற்றைத் தொடர்ந்தும் தண்டனைகளில் இருந்து விடுபடும் போக்கு தொடர்கின்றது. சாட்சி யங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. அதுமாத்திரமன்றி பாதிக் கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய நீதி இன்னமும் நிலைநாட்டப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறை யின் ஊடாக பொறுப்புக்கூறலை வலுப் படுத்தல், ஆக்கபூர்வமான முறையில் இழப்பீடுகளை வழங்கல், மீள்நிகழா மையை உறுதிப்படுத்தக்கூடியவகை யில் அரசமைப்பு மற்றும் கட்டமைப்பு ரீதி யான மறுசீரமைப்புக்களை மேற்கொள் ளல் ஆகிய 3 பிரதான விடயங்களை முன்னிறுத்தி உடனடி நடவடிக்கையைக் கோரும் வகையில் இந்த மாதம் நடை பெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பிரேரணை வரைவு அமைய வேண் டும்.

குறிப்பாக அண்மையில் யாழ். செம் மணியிலும், திருகோணமலையின் சம்பூரிலும், மன்னாரிலும் கண்டறியப் பட்டுள்ளமனிதப்புதைகுழிகளும்,குழந்தை கள் மற்றும் சிறுவர்களுக்குச் சொந்த மானவை உள்ளடங்கலாக அங்கு அடை யாளம் காணப்பட்ட மனித எச்சங்க ளும் இலங்கை அரசின் இனப்படு கொலை நோக்கத்துக்கான வலுவான ஆதாரங்களாகக் காணப்படுகின்றன.

எனவே, ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இப்போது வரை நிகழ்த் தப்பட்ட சகல அட்டூழியங்கள் தொடர்பி லும் ஆதாரங்களைத் திரட்டும் வகையில் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

அதேபோன்று இலங்கை விவகாரத் தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உடனடியாகப் பாரப்படுத்துவதற்கு அவசி யமான வலுவான ஆதாரங்களுடன்கூடிய 15 - 20 முக்கிய வழக்குகளை அடை யாளம் காண வேண்டும்.

அடுத்ததாக இலங்கை விவகாரத் தைச் சர்வதேச நீதிமன்றங்களுக்குப் பரிந்துரைத்தல், உலகளாவிய நீதிப் பொறிமுறையை நடைமுறைப்படுத் தல், இலங்கை விவகாரம் தொடர்ப- ில் சர்வதேச குற்றவியல் நீதிப் பொறி முறை ஒன்றை ஸ்தாபிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் ஐ.நா. பொதுச் சபைக்குப் பரிந்துரைக்கப் படல் என்பவற்றுக்கான கூறுகள் புதிய பிரேரணையில் உள்ளடக்கப்பட வேண் டும்.

அத்தோடு படையினரால் கையகப்படுத் தப்பட்ட காணிகளை விடுவித்தல், தமிழர் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல், மீள்குடியேற்றம், நிலை யான வாழ்வாதாரம் உள்ளிட்ட நடவடிக் கைகளைத் திட்டமிட்டு முன்னெடுப்ப தற்கு சர்வதேச அனுசரணையுடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஐ.நா. நிபுணர்கள் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் இடைக் கால உள்ளகக் கட்டமைப்பு ஒன்று நிறு வப்பட வேண்டும்." - என்று பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

**ஐக்கிய தேசியக் கட்சியின்...**

முன்னதாக, இந்த நிகழ்வை எதிர் வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை நடத் தத் திட்டமிடப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவின் உடல்நிலையைக் கருத் தில் கொண்டு, இந்த நிகழ்வை ஒத்தி வைக்க ஐக்கிய தேசியக் கட்சியின் நிர் வாகக் குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று செவ்வாய்க் கிழமை கூடிய கட்சியின் நிர்வாகக் குழு வால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவுக்கு வழங்கப்பட்ட மருத்துவ ஆலோசனை மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் கோரிக்கையின் அடிப் படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் மேலும் கூறி னார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

இங்கு தருகிறேன்.

"இன்றைய (நேற்றைய) காலைமுரசு பத்திரிகையின் 'இரகசியம் – பரகசியம்' பக்கத்தில் கௌரவ நீதிபதி ஆனந்தராஜா அவர்களின் பதவி உயர்வு பற்றி பேசி இருந்தீர்கள்.

அதில், அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்படக் காரணம் அவரது சேவை மூப்பு என்பதை விட செம்மணியை அவர் கையாளும் விதம் அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவதால் அவரை அங்கிருந்து அகற்றும் நோக்கில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளவர்களில் கடைசியாக இருக்கும் அவர் வரையான சிரேஷ்ட நீதிவான்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளீர்கள். அது தவறு. நீதிச் சேவை ஆணைக்குழு 2024 ஆம் ஆண்டு வெளியிட்ட சேவை மூப்புப் பட்டியலில் 15 ஆவது இடத்தில் கௌரவ கஜநிதிபாலனின் பெயரும், 25 ஆவது இடத்தில் கௌரவ ஆனந்தராஜாவின் பெயரும், 30 ஆவது இடத்தில் கௌரவ ஜுட்சன் அவர்களின் பெயரும் உள்ளன. எனவே அவரது பதவி உயர்வு என்பது அவரை அகற்றும் நோக்கத்திற்கானதாகக் கருதக் கூடாது. அது அவரது கௌரவத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும். ஏனெனில் அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டதற்குக் காரணம் அவரது சேவை மூப்பல்ல, செம்மணியே என்ற பிம்பம் உருவாக உங்கள் செய்தி காரணமாகி விடக்கூடாது."

– இப்படி அந்தச் சட்டத்தரணி குறிப்பிட்டு இருக்கிறார். அது மாத்திரமல்ல. நீதிவான்களின் சேவை மூப்பு ஒழுங்கு தொடர்பான பட்டியல் பிரதியையும் அவர் அனுப்பி வைத்திருக்கிறார்.

என் கருத்துத் தொடர்பில் நிலைமையைத் தெளிவுபடுத்திய அவருக்கு என்னுடைய நன்றிகள். அவர் குறிப்பிடும் கருத்தை என் வாசகர்கள் உள்வாங்கிக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

இனி, அதே விடயத்தை ஒட்டி பொதுவான சில விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பழைய கிரிக்கெட் வீரர்கள் மத்தியில் பேசப்படும் ஒரு விடயம், இப்போது 'அதிரடி'(?) கிரிக்கெட்டில் ஆர்வம் காட்டும் நமது வீரர்களுக்கு அது தெரியுமோ தெரியவில்லை.

அது – கிரிக்கெட்டில் ஓட்ட எண்ணிக்கை தொடர்பாக ஒரு விடயத்தை குறிப்பிடுவார்கள். அந்த ஓட்ட எண்ணிக்கையை 'நெல்சன் இலக்கம்' என்பார்கள். 111 அல்லது 222 அல்லது 333 என்ற ஓட்ட எண்ணிக்கை வருவதை துரதிர்ஷ்ட கணக்காக கிரிக்கெட் வீரர்கள் கருதுவதுண்டு. இந்த 111 இல் – அதாவது நெல்சன் இலக்கத்தில் – ஓட்ட எண்ணிக்கை வந்து நின்றால், அந்தச் சமயத்தில் துடுப்பாடும் தரப்புக்கு ஒரு விக்கெட் விழும் என்ற கருத்து நிலை உண்டு. ஆகவே மொத்த ஓட்ட எண்ணிக்கை நெல்சன் இலக்கத்துக்கு வராமல் 110 இலிருந்து 112 க்கு அல்லது 114 க்குச் செல்லக் கூடியதாக இரட்டை ஓட்டங்களை அல்லது அதற்கு கூடிய ஓட்டங்களை அச்சமயத்தில் எடுப்பதற்கு துடுப்பாட்ட வீரர்கள் முயலும் வழக்கம் உண்டு.

இந்த நெல்சன் இலக்கம் பற்றி நாங்கள் கிரிக்கெட் ஆடுகின்ற காலங்களில் அதிகம் பேசியதுண்டு. இப்போதைய வீரர்கள் பேசுகிறார்களோ, அவர்களுக்கு அது பற்றி ஏதும் தெரியுமோ தெரியவில்லை. ஆனால் இப்படி 111 என்பதை நெல்சன் இலக்கம் எனப் பெயரிடப்பட்டமைக்கு ஒரு காரணம் உண்டு.

மிகவும் மெச்சப்பட்ட முன்னாள் ஆங்கிலேயக் கடற்படைத் தளபதியான அட்மிரல் நெல்சன் பிரபு ஒரு 'ஐ' (கண்), ஒரு கை, ஒரு கால் கொண்டவராம். ஆக ஒன்று, ஒன்று, ஒன்று, என உறுப்புகளைக் கொண்டவரைக் குறிப்பதற்காக 111 என்ற இலக்கம் நெல்சன் இலக்கமென அழைக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். ஆனால் சில சரித்திர ஆய்வாளர்கள் அட்மிரல் நெல்சனுக்கு ஒரு கால்தான் என்பது தவறான தகவல் என்றும் குறிப்பிடுகிறார்கள் என்பதையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல, 111 என்ற இந்த இலக்கம் கிரிக்கெட்டின் நடப்பட்ட மூன்று ஸ்டாம்புகளை – விக்கெட்டுகளை – குறிப்பதாகவும் அடையாளப்படுத்தப்படுவதால், அந்த இலக்கம் கிரிக்கெட்டுக்கு – அதுவும் துடுப்பாடிக் கொண்டிருக்கும் தரப்புக்கு – விக்கெட் இழப்பை வாங்கித் தரும் எண் என்ற கெட்ட பெயர் உண்டு.

சரி. செம்மணி விவகாரத்தை பிரஸ்தாபிக்க வந்த நான். இப்போது அதை விட்டு, இந்த நெல்சன் இலக்கம் பற்றி பிரலாபிப்பது ஏன் என்று நீங்கள் கேட்பது புரிகிறது. காரணம் உண்டு.

நேற்றைய செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுடன் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது அடையாளம் காணப்பட்ட என்புக் கூடுகளின் தொகுதி 222 என்ற நெல்சன் இலக்கத்தை எட்டி இருக்கிறது.

துடுப்பாட்டத்தில் நடப்பது போல இங்கும் ஒரு விக்கெட் இந்த இலக்கத்தில் வீழுமா என்று நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது.

அதுதான் இவ்வளவு காலமும் இந்த விடயத்தை நேர்சீராகச் செய்த ஒரு நீதிவானைப் பதவி உயர்வு என்ற பெயரில் நாம் இந்த விவகாரத்தில் இழந்திருக்கின்றோமே...! இதுதான் நெல்சன் இலக்கத்தில் நமது தரப்பில் வீழ்ந்த விக்கெட்டோ?

---

**இன்று இலங்கை வருகின்றார்...**

மிக உயர்ந்த மட்ட விஜயமாக இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது, இலங்கை – இத்தாலி அரசியல் ஆலோசனைகளின் ஆரம்ப அமர்வுக்கு வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவுடன் இணைந்து இத்தாலிய பிரதி அமைச்சர் திரிபோடி தலைமை தாங்குவார்.

இந்த விஜயத்தின் போது அரசியல் ஆலோசனை பொறிமுறையை நிறுவுவது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான கலந்துரையாடலுக்கான கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பை வழங்குகின்றது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்து வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவும் மரியா திரிபோடி திட்டமிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் 1952 இல் நிறுவப்பட்டன என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**கச்சதீவில்...**

நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் இணைந்து நேற்று முன்தினம் கச்சதீவுக்குக் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டமை தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"கச்சதீவு பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் எமது மீனவ சொந்தங்களின் பாதுகாப்பு, அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அந்தப் பகுதியில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றி கடற்படையினரிடம் கேட்டறிந்தோம்.

அதேபோல் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்குரிய பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நெடுந்தீவு மற்றும் கச்சதீவை ஒன்றிணைத்த வகையில் சுற்றுலா திட்டமொன்றை மேற்கொள்வதற்குரிய சாத்தியப்பாடு பற்றியும் கேட்டறியப்பட்டது.

நெடுந்தீவுக்குத் தற்போது சுற்றுலாப் பயணிகள் வரும் நிலையில் அதனைக் கச்சதீவு வரை மேம்படுத்துவதற்குரிய திட்டம் உள்ளது." – என்றார்.

---

**50 நாள்கள்...**

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 41ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது நான்கு மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 222ஆக அதிகரித்துள்ளது.

மேலும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 8 மனித என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி புதைகுழியில் இருந்து இதுவரை 206 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் முதலாம் கட்ட அகழ்வில் 9 நாள்களும், இரண்டாம் கட்ட அகழ்வில் 41 நாள்களும் என மொத்தமாக 50 நாள்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் ஜனாதிபதி அநுர குமாரதான் ரில்வின் அல்ல என்கிறார் சுமந்திரன்!

## அமைச்சரவைத் தீர்மானங்கள் அமைச்சரவைக் கூட்டங்களிலேயே எடுக்கப்பட வேண்டும்; பெலவத்தையில் அல்ல எனவும் வலியுறுத்து




அமைச்சரவைத் தீர்மானங்கள் அமைச்சரவைக் கூட்டங்களிலேயே எடுக்கப்பட வேண்டுமே தவிர பெலவத்தையில் அல்ல. நாட்டின் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக அன்றி ரில்வின் சில்வா அல்லர்.

– இவ்வாறு கூறியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

நேற்று உடுவில் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற அமரர் வி.தர்மலிங்கத்தின் நினைவு தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவரின் உரையின் முழு விவரமும் வருமாறு:-

விஸ்வநாதர் தர்மலிங்கம் அவர்கள் பொது வாழ்க்கைக்குள் நுழைந்தது 1944 ஆம் ஆண்டு. ஆரம்பத்தில் இப்பிரதேசத்தின் உள்ளூராட்சி சபை அங்கத்தினராக தெரிவாகி பின்னர் இச்சபையின் தலைவராகவும் கடமையாற்றினார் 1952 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாக உடுவில் தொகுதியில் போட்டியிட்டு 1960 மார்ச் தேர்தலில் முதலில் வெற்றி பெற்றார். அதன் பின் சகல தேர்தல்களிலும் வெற்றி பெற்று, 1977 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் மீள் நிர்ணயம் செய்யப்பட்ட, மானிப்பாய் என்று பெயரிடப்பட்ட தொகுதியில் வெற்றி பெற்றார். 1960 இலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராக செயலாற்றி 1983 ஆம் ஆண்டு பிரிவினைக்கெதிராக சத்தியபிரமாணம் எடுக்காத காரணத்தால்,நாடாளுமன்றபதவி பறிபோகும் வரை உடுவில் ஃ மானிப்பாய் தொகுதியின் பிரதிநிதியாக இருந்திருக்கின்றார்.

தர்மலிங்கம் அவர்களின் அரசியல் வாழ்க்கையில் மிக முக்கியமான அம்சம், தந்தை செல்வா சார்பில் அரசியல் நிர்ணய சபையில், அவர் முன்மொழிந்த பிரேரணைகள் ஆகும். 1971ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி உரையாற்றுகிறபோது "எனது தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களின் பெயரின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்ற அடிப்படை தீர்மானம் 2 இற்கான திருத்தத்தை பிரேரிக்கும் பொறுப்பை எனது கட்சி எனக்குக் கொடுத்திருப்பத்தை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்" என்று ஆரம்பித்து ஆங்கிலத்திலே ஏறத்தாழ இரண்டு மணி நேரம் உரையாற்றியிருந்தார். அதற்கு முன்னர் தமிழிலே சில வார்த்தைகளைக் கூறி அந்தப் பேச்சை ஆங்கிலத்திலே செய்யவேண்டுமென்றுதனது கட்சிதனக்கு உத்தரவிட்டதை பதிவுசெய்திருக்கிறார். அதன் காரணம் மொழிபெயர்ப்பாளர்களிலே தமக்கு நம்பிக்கை இல்லை என்பதால் அல்ல மாறாக, அமைச்சர்கள் (கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா) சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக பல ஆண்டுகளாக போராடிய ஒரு பெரியார் என்பதை மனதிற்கொண்டு தமது கருத்தை அவருக்கு நேரடியாக தெரிவிக்க வேண்டுமென்பதற்காகவே ஆங்கிலத்தில் உரையாற்றுவதாகக் கூறினார்.

முதலாவது குடியரசு யாப்பொன்றை வரைவதற்காக 1970 இலிருந்து, 1971 இறுதி வரை கொழும்பு, நவரங்கஹல மண்டபத்தில் அரசியல் நிர்ணய சபை கூடிய போது ஜுலை1971 வரை இலங்கை தமிழ் அரசுக் கட்சி அதிலே பங்குபற்றியிருந்தது. அங்கே, இலங்கைக்கான மாதிரி அரசமைப்பொன்றை சமர்ப்பித்தது மட்டுமல்லாமல், அதையொட்டி அடிப்படை பிரேரணைகளுக்கு திருத்த பிரேரணைகளை முன்மொழிந்தவர் திரு. தர்மலிங்கம் அவர்கள். இறுதியாக, "குறைந்தது உங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி கச்சேரிகளை மக்களால் தெரிவுசெய்யப்படும் நிறுவனங்கள் ஆக்குங்கள்" என்ற முன்மொழிவும் 88-13 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது. அதன் பின்னர் தான் தந்தை செல்வா எழுந்து எமது ஆகக் குறைந்த கோரிக்கைகளைக் கூட நீங்கள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் இந்த சபையில் நாம் தொடர்ந்து பங்கேற்பது அர்த்தமற்றது ஆகையால் நாளையிலிருந்து நாம் வரமாட்டோம் என்று அறிவித்தார்.

அதன் பின்னர் தான் தந்தை செல்வாவின் இராஜினாமா, காங்கேசன்துறை இடைத்தேர்தல், 1974 இல் உருவாக்கப்பட்ட தமிழர் கூட்டணி, 1976 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியாக பரிணாமம் பெற்று வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 1977 ஜுலை பொதுத் தேர்தலில், தனிநாட்டுக்கான மக்கள் ஆணையை தமிழ் மக்கள் வழங்கினார்கள். ஆகவே தனி நாட்டை தவிர வேறு வழி இல்லை என்ற தீர்மானத்திற்கு இட்டுச்சென்ற பாதை, அரசியல்நிர்ணய சபையில் திரு. தர்மலிங்கத்தின் பிரேரணைகள் பெரும்பான்மை வாக்குகளால் நிராகரிக்கப்பட்டதிலிருந்துதான் ஆரம்பித்தது.

ஆகவே, சமஷ்டி அடிப்படையிலான புதிய அரசமைப்பை நாம் கோரியிருக்கின்ற இந்த வேளையில் 55 வருடங்களுக்கு முன்னர் திரு. தர்மலிங்கம் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில், முன்வைத்த பிரேரணைகளை ஆராய்வது பொருத்தமானதாக இருக்கும் என நினைக்கிறேன்.

அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்ட முதலாவது அடிப்படைத் தீர்மானம், நாட்டின் பெயர், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என்பதாகும். இது சம்பந்தமாக வாத விவாதங்கள் நடைபெற்றாலும், இறுதியில் இ. த. அ. கட்சி அதற்கு சார்பாக வாக்களித்தது.

தொடர்ச்சி▼

# நாட்டின் ஜனாதிபதி அநுர குமாரதான் ரில்வின் அல்ல என்கிறார் சுமந்திரன்!

தொடர்ச்சி▲

அடுத்த நாள் தந்தை செல்வா அதற்கான காரணத்தை விளக்கிக் கூறினார். "நாமும் ஜனநாயகத்தையும் சோசலிசத்தையும் ஏற்றுக் கொள்வதால் அப்படி வாக்களித்தோம், ஆனால் சோசலிசம் என்ற பெயரில் கம்யூனிசத்தையும் ஒரு கட்சி ஆட்சியையும் நிறுவ முயல்வதை நாம் எதிர்க்கிறோம்" என்று கூறினார். இன்றைய நிலைமைக்கு மிகப் பொருத்தமானது என்பதால் இதை இங்கு குறிப்பிடுகிறேன்.

இ. த. அ. கட்சி சோசலிசத் தத்துவத்தை எமது மூலக் கோட்பாடாக கொண்ட கட்சி. அதிலும் அமரர் தர்மலிங்கம் ஒரு இடதுசாரியாகவே அறியப்பட்டவர். ஆனால், பொதுவுடமையை நாம் ஏற்றுக்கொண்டாலும், அதன் பெயரில் ஜனநாயகம் அழிக்கப்படுவதை எதிர்ப்போம். எமது நாடு பன்மைத்துவமானது ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்களை தன்னகத்தே கொண்டது என்பதை வலியுறுத்துகிற நாம், பல கட்சி ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிடில் எமது அரசியல் இருப்பு கேள்விக் குறியாகும். ஒரு கட்சி ஆட்சியை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. தற்போதைய ஆட்சியாளர்கள் அப்படியான திசையில் நாட்டைக் கொண்டு செல்ல முனைகிறார்கள். இது எமக்கு மிகவும் ஆபத்தானது. அமைச்சரவைத் தீர்மானங்கள் அமைச்சரவைக் கூட்டங்களிலேயே எடுக்கப்பட வேண்டுமே தவிர பெலவத்தையில் அல்ல. நாட்டின் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக அன்றி ரில்வின் சில்வா அல்லர்.

இரண்டாவது அடிப்படைத் தீர்மானம் இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு என்பதாகும். இதிலே தான் திரு. தர்மலிங்கம் அவர்கள் அது சமஷ்டி அரசாக இருக்க வேண்டும் என்ற திருத்தத்தைப் பிரேரித்து மிக நீண்ட உரையொன்றை ஆற்றினார். இது வரலாற்று சிறப்பு மிக்க உரை. அதிலே சோவியத் ரஷ்யா, யூகோஸ்லாவாக்கியா மற்றைய பொதுவுடமை நாடுகளில் காணப்படும் இணைப்பாட்சி, சுவிஸ்லாந்தின் கூட்டாட்சி போன்ற முன்மாதிரிகளை விளக்கிக் காண்பித்தார். லெனின் எப்படியாக தேசங்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தினார் என்பதை எடுத்துச் சொன்னார். அன்றைய அரசு சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிகளான சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் கூட்டாக இருந்ததால் அவர்களுடைய தத்துவங்களையே உபயோகித்தார். இதுவும் இன்றைய ஆட்சியாளர்களுக்கும் பொருந்தும். 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஜே. வி. பி. சார்பாகப் போட்டியிட்ட அவர்களின் ஸ்தாபகத் தலைவர் ரோகண விஜேவீர, தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்று கூறிப் போட்டியிட்டவர்.

மேற்சொன்ன அடிப்படைத் தீர்மானங்களில் நாட்டின் பெயர் ஜனநாயக சோஷலிச குடியரசு என்றும், பிறிதாக, அரசு, ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டியா என்ற விவாதத்தையும் கொண்டிருந்தது. நாடு ஒரு நாடாக இருப்பதை இ. த. அ. கட்சி எதிர்க்கவில்லை. ஸ்ரீ லங்கா என்ற சொல் தமிழில் இலங்கை என்று மாற்றப்படவேண்டும் என்று மட்டும் கேட்டிருந்தார்கள். ஆனால் அரசைப் பொறுத்த வரையில் அது ஒற்றையாட்சியாக இருக்க முடியாது, சமஷ்டியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். 2016-19 வரையான அரசமைப்பு உருவாக்க முயற்சிகளிலும் இதே அணுகுமுறைதான் கையாளப்பட்டது. அரசைக் குறித்துச் சொல்லுகிற ஒற்றையாட்சி என்கிற பதம் நீக்கப்பட்டு நாட்டை குறித்துச் சொல்லுகிற ஒருமித்த நாடு என்ற சொற்பதம் உபயோகிக்கப்பட்டது. சிங்கள மொழியிலும் அதே அணுகுமுறையே கையாளப்பட்டது. தமிழில் ஒன்றும் சிங்களத்தில் வேறொன்றுமாக இருப்பதாக செய்யப்பட்ட, தற்போதும் செய்யப்படுகின்ற பிரச்சாரம் முற்று முழுக்க பொய்யானது. தற்போதுள்ள அரசமைப்பின் அரசைக் குறிக்கிறதான ஏகீய ரஜய என்ற சொற்பதம் தவிர்க்கப்பட்டு நாட்டைக் குறிக்கிறதான ஏகீய ராஜ்ய என்ற சொற்பதம் உபயோகிக்கப்பட்டது. தமிழிலே செய்யப்பட்டதே சிங்களத்திலும் செய்யப்பட்டது. சிங்களத்தில் 'ரஜய' என்றால் 'ஆட்சி', 'ராஜ்ய' என்றால் 'நாடு'.

'ஒற்றையாட்சி' என்ற சொல்லுக்குப் பதிலாக 'சமஷ்டி' என்ற சொல் பிரதியீடு செய்யப்படவேண்டும் என்ற திருத்தப் பிரேரணையை தர்மலிங்கம் முன்வைத்திருந்தாலும் கூட, தனது பேச்சின் இறுதியில் 'சமஷ்டி' என்ற சொல்லை உபயோகிப்பதில் அரசாங்கத்திற்கு பிரச்சினை இருக்குமாக இருந்தால் நான் முன்னர் குறிப்பிட்டது போல, அவர்களது தேர்தல் விஞ்ஞாபணத்தில் கூறியபடி கச்சேரிகளை இல்லாமலாக்கி மாவட்ட சபைகளை நிறுவுமாறு கேட்டுக்கொண்டார். தேர்தல் காலத்தில் அரசாங்கத்தில் உள்ள கட்சிகள் வெளிப்படையாகவே சமஷ்டிக்கெதிராக பிரசாரம் செய்து மக்களாணையை பெற்றிருந்தமையே இந்த விட்டுக் கொடுப்புக்கு காரணமாகவும் அவர் விளக்கியிருந்தார்.

சமஷ்டி ஆட்சி முறையே சமஷ்டிக் கட்சியின், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின், அடிப்படைக் கொள்கை, கோட்பாடு எல்லாமே. ஆனால் பெயர் பலகைகளில் தொங்கிக் கொண்டிருக்காமல் யாப்பின் உள்ளடக்கத்திலே அது அமைய வேண்டும் என்பதையே பண்டா-செல்வா ஒப்பந்தம் மற்றும் டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பன சுட்டி நிற்கின்றன. 1971 ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் இ. த. அ. கட்சி முன்வைத்த மாதிரி அரசமைப்பும், திரு. தர்மலிங்கம் முன்மொழிந்த இரண்டாம் அடிப்படைத் தீர்மானத்திற்கான திருத்தமும், 'சமஷ்டி' என்ற சொல்லைக் கொண்டிருந்தாலும், உள்ளடக்கம் சமஷ்டி அடிப்படையில் இருப்பதே முக்கியமானதென்ற தந்தை செல்வாவின் அணுகுமுறையையே திரு. தர்மலிங்கமும் கடைபிடித்தார். அதையே இ.த.அ கட்சியும் தொடர்ந்தும் கடைபிடிக்கும்.

இ. த. அ. கட்சி அன்று முன்மொழிந்த மாதிரி அரசமைப்பு இன்றைக்கும் பொருத்தமானது என்பது எனது கருத்து. அந்த மாதிரி அரசமைப்பின் சில கூறுகளை திரும்பவும் ஆராய்வது நல்லது.

குறிப்பாக, அரசியற் கட்டமைப்பு, ஐந்து மாநிலங்களாகவும், தலை நகரம் மத்திய அரசின் கீழ் வருவதாகவும் செய்யப்பட்ட முன்மொழிவு. அந்த ஐந்து மாநிலங்களாவன :

1. தெற்கு, மேற்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
2. வட மத்திய, வட மேல் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
3. மத்திய பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
4. வட, வட கிழக்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
5. தென்கிழக்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

பின்னைய காலங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் ஏற்பட்ட இணக்கப்பாடுகளிலும் தென் கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கான ஒரு தனி அலகு என்பது மூன்று தெரிவுகளில் ஒன்றாக அமைந்திருந்தது. இந்த விடயத்திலேயும் ஆரம்பத்திலிருந்தே இ.த.அ. கட்சியின் யாப்பின் விதி 2 இல் கட்சியின் நோக்கமாக "ஒரு சுயாட்சித் தமிழ் அரசும், ஒரு சுயாட்சி முஸ்லிம் அரசும்" என்கிற அடிப்படை கோட்பாடு தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்துள்ளது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

1949 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக் கோட்பாடோடு முரண்பட்டு பிரிந்து சமஷ்டிக் கட்சியாக உருவெடுத்த இ.த.அ. கட்சி தொடர்ந்தும் தனது அடைப்படைக் கொள்கைக் கோட்பாட்டோடும் தந்தை செல்வாவின் அணுகுமுறையோடும் பயணிக்கிறது. வேறு கொள்கைகளைக் கொண்டிருந்த மற்றைய தமிழ்க் கட்சியினர் முக்கால் நூற்றாண்டுக்கு மேலான எமது கொள்கையை ஏற்று மாறுகிறபோது அவர்களையும் எங்களோடு இணைத்துப் பயணிப்பதில் நாம் பின்நிற்க மாட்டோம் என்பதை எமது கொள்கையையும் அணுகுமுறையையும் முதலாவது குடியரசு யாப்பு இயற்றப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் திரு. தர்மலிங்கம் அவர்கள் விவரமாக ஆற்றிய உரையை நினைவுபடுத்தும் இவ்வேளையில் தெளிவாக அறிவித்து நிறைவு செய்கிறேன்.

# அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட நால்வருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்




முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் அவரது மனைவி உட்பட 4 பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர்.

2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், வெள்ள நிவாரணம் வழங்குவதாகக் கூறி கனியவள கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 6.1 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான தொகையை சட்டவிரோதமாக செலவழித்து அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் லியான் வருஷவிதான முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தது.

அதன்படி, அறிவித்தல் அனுப்பப்படும்போது பிரதிவாதிகள் மேல் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என உத்தரவிட்ட மேலதிக நீதவான், பின்னர் வழக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்த உத்தரவிட்டார்.



# யாழில் மேம்பால விளம்பரப்பலகை நேற்றிரவு கழற்றி அகற்றப்பட்டது!

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட – நகரை அண்டி – பருத்தித்துறை வீதியில் முறையான அனுமதியின்றி அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் மேம்பால விளம்பரப்பலகை நேற்று இரவு வெட்டி அகற்றப்பட்டது.



இந்த மேம்பால விளம்பரப் பலகை அமைப்பதற்கான விண்ணப்பம் முறையாகப் பூர்த்தி செய்யப்படாமல் யாழ் மாநகர சபைக்கு வழங்கப்பட்டதாகவும், சபையின் அனுமதி இன்றி விளம்பரப்பதாகை அமைக்கப்பட்டதாக பல்வேறு குற்றச்சாட்டுக்களை யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் முன்வைத்த நிலையில் மேம்பால விளம்பரப்பலகை நேற்று இரவு 11 மணியளவில் அகற்றப்பட்டுள்ளது.

நாளையதினம் யாழ் மாநகர சபை அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் இந்த விடயம் குறித்து அங்கு பிரஸ்தாபிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காதில் பூச்சுற்றும் அநுர!

இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல சந்தேகத்தை ஏற்படுத்தும் விதத்தில் வடக்கே வந்து நின்று கொண்டு உரையாற்றி இருக்கின்றார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

வடக்கு மாகாணம் தொடர்பாக தேவை இல்லாத அச்சத்தை ஏற்படுத்தும் அரசியல் ஒன்று தென்பகுதியில் நடக்கின்றது என்று ஏதோ தாம் நல்ல பிள்ளை என்பது போல, அந்தப் போக்குக்கு எதிராக விசனம் தெரிவித்துக் கருத்து வெளியிட்டிருக்கின்றார் அவர்.

ஒரு காலத்தில் 'புலிக்குடியிருப்பு' என்று வர்ணிக்கப்பட்ட புதுக்குடியிருப்பில் வந்து நின்று கொண்டுதான் இந்த உரையை அவர் ஆற்றியிருக்கின்றார்.

வடக்கில் இன்னும் வன்முறை அரசியலுக்கான வாய்ப்பு இருப்பது போன்ற கருத்து நிலைப்பாடு தென்னிலங்கையில் காட்டப்படுகின்றது, அத்தகைய அரசியல் தவறானது என்ற பாணியில் வடக்கில் வந்து அவர் பேசியிருக்கிறார். அது உண்மைதான்.

ஆனால் இவ்விவகாரத்தில் இரண்டு விடயங்களை அவருக்குச் சுட்டிக் காட்டுவது முக்கியம்.

யுத்தம் நடந்த காலத்திலும், யுத்தம் முடிந்த பின்னரும், அத்தகைய நிலைப்பாட்டை தென்னிலங்கை மக்கள் மத்தியில் வலிமையாக ஊடுருவச் செய்து, அதில் அரசியல் செய்த முதல் முன்னணித் தரப்பு அவரது ஜே.வி.பிதான் என்பதை அவர் மறந்து விடக்கூடாது.

அடுத்தது - இப்போது நல்ல பிள்ளை போல, தாங்கள் அவ்வாறு வடக்கு மாகாணம் தொடர்பில் தேவையில்லாத அச்சத்தை எழுப்புபவர்கள் அல்லர், அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பும் மற்றைய அரசியல் தரப்பினர்தான் அதைச் செய்கின்றனர் என்ற மாதிரி அவரது புதுக்குடியிருப்புப் பேச்சு அமைந்துள்ளது.

அது உண்மையாக இருந்தால், அத்தகைய உண்மைத் தன்மையுடன் அவரது அரசுத் தலைமை செயற்பட வேண்டும்.

வடக்குத் தொடர்பில் அவர் குறிப்பிடுவது போல தேவையற்ற அச்சமொன்று தென்னிலங்கையில் காட்டப்படுவது தவறு என்றால், இலங்கையின் படைப் பலத்தில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான துருப்புகளை வடக்குக் கிழக்கில் அவரது தலைமையிலான அரசு வைத்திருப்பது ஏன்? அவர்தான் முப்படைகளின் தளகர்த்தர். அவரே தமிழர் தாயகத்தில் - யுத்தம் முடிந்து 16 ஆண்டுகளாக வன்முறைகள் இடம்பெறாமல் அமைதியாக இருக்கும் தமிழர் பிரதேசத்தில் - அளவுக்கு அதிகமாக இராணுவப் படை பலத்தைக் குவித்து, ஆக்கிரமிப்பைத் தொடரும் அரசினுடைய தலைவர். அவர்தான் அத்தகைய படைக் குவிப்பின் மூலம் தென்னிலங்கைக்கு வடக்கு தொடர்பான தேவையில்லாத அச்சத்தை உருவாக்கிப் பேணுகின்றார் என்பதை மறந்து - அல்லது மறைத்து - அவர் புதுக்குடியிருப்பில் புது வியாக்கியானம் கூறப் புறப்பட்டிருக்கின்றமைதான் வேடிக்கை.

அதிகாரத்தை கைப்பற்றவும், கைப்பற்றிய அதிகாரத்தைத் தக்க வைக்கவும், தமிழர் தேசத்துக்கு எதிராக இனவாதத்தைக் கிளப்பும் தென்னிலங்கையின் வழமையான அரசியல் பரவணிப் பழக்கத்தின் ஒரு கூறுதான் இத்தகைய தேவையற்ற அச்சமூட்டும் அரசியல் தந்திரம்.

வடக்கு - கிழக்கில் படை குவிப்பின் மூலம் அந்தத் தந்திரத்தை தமது அரசியலுக்காகத் தானே முன்னெடுத்த படி, அதை மறைத்து, அந்தத் தந்திரத்தை மற்றத் தரப்புக்கள் முன்னெடுக்கின்றன என அவர் குற்றம் சாட்டுவது - அதுவும் வடக்கில் வந்திருந்து கொண்டு குற்றம் சாட்டுவது - வடக்கு, கிழக்கு மக்களின் காதில் பூச்சூற்றும் வேலையன்றி வேறில்லை.



# இளம் ஊடகவியலாளர் பிரகாஷின் 4ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

**(எஸ்.நிதர்ஷன்)**

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மறைந்த இளம் ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஷின் நான்காவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் ஞானப்பிரகாசம் பிரகாஷின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

யாழ். தென்மராட்சி, கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஸ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு நோயால் பாதிக்கப்பட்டதால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் தரம் ஐந்துடன் தனது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திக்கொண்டார்.

அந்நிலையிலும் அவற்றை எல்லாம் தாண்டி அவர் ஊடகத்துறையில் தனக்கொன்று ஓர் இடத்தைத் தக்க வைத்திருந்தவர். அவர் சுயாதீன ஊடகவியலாளராக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்ததுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத் தளங்களுக்கும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்தார். அதே வேளை, சில இணையத்தளங்களில் செய்திப் பதிவேற்றுநராகவும் கடமையாற்றி வந்தார்.

இந்நிலையில், கடந்த 2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாற்றகம் 2ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார்.



















# ‘வன்மம்’ நூல் அறிமுக நிகழ்வு









கிருஷாந்தி கொலை வழக்கு விசாரணைகளின் தொகுப்பான “வன்மம்“ நூல் அறிமுகம் நேற்று மாலை செம்மணிச் சந்தியில் இடம்பெற்றது.

இதில் முதல் பிரதியை தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் பெற்றுக்கொண்டார்.

தமிழர் வாழ்வுரிமை மையம் ஏற்பாடு செய்திருந்த இந்நூல் அறிமுக நிகழ்வில், அரசியல் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# நாடு முழுவதும் 100 ரயில் நிலையங்களை புதுப்பிப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பம்










நாடு முழுவதும் 100 ரயில் நிலையங்களை புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்ட 'Dream Destination' என்ற தேசிய திட்டத்தின் முதல் கட்டம், போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தலைமையில் நேற்று முன் தினம் தல்பே ரயில் நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் ரயில் நிலையங்களை தற்போதைய உலகத்திற்கு ஏற்ற வகையில் புதிய அடையாளத்துடன் நவீன மயப்படுத்துவதற்காக அரசாங்கம், தனியார் துறை மற்றும் பொதுமக்களின் கூட்டு வேலைத்திட்டமாக இது நடைமுறைப் படுத்தப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் ஆகியவை தனியார் துறையின் பங்களிப்புகளுடன் இணைந்து 100 ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

## புலமைப்பரிசில் பெறுபேறு விரைவில் வெளியிடப்படும்

### பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு



2025 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன என திணைக்களத்தின் ஆணையாளர் இந்திகா லியனகே தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 307,951 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

## உள்ளூர் பால் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை



இலங்கையின் பால் உற்பத்தித் துறையை வலுப்படுத்தி, உள்நாட்டு பால் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, ஏற்றுமதி வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வதற்காக, அரச மற்றும் தனியார் துறை பங்குதாரர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பால் உற்பத்தியாளர்களை மேம்படுத்துதல், புதிய தொழில் முனைவோரை இந்தத் தொழிலில் நுழைய ஊக்குவித்தல் மற்றும் பால் தொடர்பான பொருட்களுக்கான சந்தைப்படுத்தல் வழிகளை வலுப்படுத்துதல் ஆகியன குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மற்றும் தேசிய தொழில் முயற்சி அதிகார சபை ஆகியவை இதனைச் செயல்படுத்துவதில் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழகத்தின் புகழ்பெற்ற

PSR SILK SAREES

நிறுவனத்தின் ஆதரவுடன்

# இலங்கை கொழும்புவில்

# மணிமேகலைப் பிரசுரத்தின்

## புத்தக அறிமுக விழாவும் விற்பனைக் கண்காட்சியும்

06.09.25 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு
கொழும்பு தமிழ்ச் சங்கம், தமிழ்ச் சங்க சாலை,
56, ருத்ரா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு -6.

இலங்கையில் ரவி தமிழ்வாணனின்
தொடர்பு கைபேசி : 0094 743 171 971
வாட்ஸ் அப்: 98415 44187

இந்த இனிய புத்தக கண்காட்சிக்கு சுற்றமும் நட்புமாக கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கும்

முனைவர் ரவி தமிழ்வாணன்
நிர்வாக இயக்குநர், மணிமேகலைப் பிரசுரம்

**மணிமேகலைப் பிரசுரம்**
எண் 21, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
தொலைபேசி: 044-24342926, 24346082, 91764 51934
மின் அஞ்சல்: manimekalaiprasuram@gmail.com
இணையதளம்: www.tamilvanan.com



**06.09.25 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு**
**கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்**
**புத்தக அறிமுக விழாவும்! விற்பனைக் கண்காட்சியும்!!**

நிகழ்ச்சி நிரல்

மாலை 5 மணி : தமிழ்த் தாய் வாழ்த்து

வரவேற்புரை : முனைவர் திரு. **ரவி தமிழ்வாணன்**
நிர்வாக இயக்குநர், மணிமேகலைப் பிரசுரம்

தலைமை : திருமதி. **சுகந்தி ராஜகுலேந்திரா**
தலைவி, கொழும்பு தமிழ்ச் சங்கம்

அருளாசி உரை : ஆத்மசங்கமம் தவத்திரு
**சஞ்சீவி இராஜா சுவாமிகள்**, காஞ்சிபுரம்

சிறப்புரை : திரு. **கம்பவாரிதி ஜெயராஜ்**
திரு. **அப்துல் ஹமீது**, ஊடகவியலாளர்
திரு. **மனோ கணேசன்**, நாடாளுமன்ற உறுப்பினர்

முன்னிலை : திரு. **திருமுருகன்**, திரைப்படம் மற்றும் சின்னத்திரை இயக்குநர், 'மெட்டி ஒலி' 'நாதஸ்வரம்' தொடர்கள்
திரு. **எம்.ஏ.சுமந்திரன்**, பொதுச் செயலாளர் இலங்கை தமிழரசு கட்சி
திரு. **சத்தீஷ்**, தோஹா, கத்தார்
திரு. **ராஜசீலன்**, நிர்வாக இயக்குநர் செவேன்ட் ஆண்டனிஸ் குழும நிறுவனங்கள்

சிறப்பு விருந்தினர்கள் : பேராசிரியர் திரு. **கா. முருகேசன்**, கோயம்புத்தூர்
திரு. **சவுந்தர்ராஜன்**, தொழிலதிபர், கொழும்பு
திரு. **நாகேஷ் லோகநாதன்**
திரு. **சுப்பிரமணியன்**, தமயந்தி எக்ஸ்போர்ட்ஸ்
ஜோதிடத் திலகம், பேராசிரியர் **திரு.பி.கே.சாமி**
திரு. **கங்காதரன்**, ஜோதிடர்
திரு. **ஹக்கீம்**, சட்டத்தரணி

நிகழ்ச்சி நிரல்... தொடர்ச்சி

வாழ்த்துரை : திரு. **கணேஷ் ஈஸ்வரன்**
நிர்வாக இயக்குனர், ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவனம்
முனைவர் திரு. **சதீஷ்குமார்**
சிரேஷ்ட உப தலைவர், மலையக மக்கள் முன்னணி
வைத்திய கலாநிதி திரு. **ஞானசேகரன்**
ஆசிரியர், ஞானம் சஞ்சிகை
டாக்டர் **அல் ஹாஜ் ரசூல் மன்சூர் ஜே.பி.**

**தங்களின் வருகையால் சிறப்பு சேர்க்க இருக்கும் பெருமைமிகு பத்திரிகையாளர்கள்**

திரு. **வித்யாதரன்** அவர்கள், ஆசிரியர், காலைமுரசு மின்னிதழ்
திரு. **பிரபாகரன்** அவர்கள், ஆசிரியர், வீரகேசரி சர்வதேச பதிப்பு
திரு. **கஜன்** அவர்கள், பிரதம ஆசிரியர், வீரகேசரி நாளிதழ்
திரு. **செந்தில்வேலர்** அவர்கள், பிரதம ஆசிரியர், தினகரன் நாளிதழ்
திரு. **கே.ஆர்.பி.ஹரன்** அவர்கள், ஆசிரியர், தினக்குரல்
திரு. **ஆர்.சிவராஜா** அவர்கள், ஆசிரியர், தமிழன் நாளிதழ்

நிகழ்ச்சி நெறியாளர் : திருமதி. **ரொஷாணி**

நன்றியுரை : திரு. டாக்டர் **ஜமால்கான் மன்சூர்**, JP. அவர்கள்

**வெளியிடப்படும் 36 நூல்கள் கொண்ட ஒரு தொகுதியை வாங்கி சிறப்பிக்க இருப்பவர்கள்**

திரு. **ராஜேந்திரன்** அவர்கள், தர்மகர்த்தா புதிய கதிரேசன் கோயில்
திரு. **சரவணபவன்** அவர்கள், மேனாள் பாராளுமன்ற உறுப்பினர்
திரு. **பத்மராஜ்** அவர்கள், தொழிலதிபர்
திரு. **மனோ** அவர்கள், தொழிலதிபர்




# பிரதமர் மோடியை வரலாறு மன்னிக்காது; ஆர்ப்பாட்டத்தின்போது ஆ.ராசா ஆவேசம்

"மோடி தேசபக்தி உள்ளவராக இருந்தால் மன்மோகன் சிங் சொன்னது போல தனித்தனி பொருள்களுக்கு வரி என மாற்றி புதுக் கொள்கையை வரையறுக்க வேண்டும். இதுபோன்ற மாற்றுத் திட்டங்களை கொண்டு வரும் வரை மோடியை வரலாறு மன்னிக்காது."

– இவ்வாறு ஆ.ராசா எம்.பி கூறியுள்ளார்.

அமெரிக்க அரசின் 50 சதவீத வரிவிதிப்பால் கடும் பாதிப்புள்ளாகி உள்ள திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களை கண்டுகொள்ளாமல் கைவிட்ட மத்திய பாஜக அரசை கண்டித்தும், தொழில் துறையினருக்கு உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் திருப்பூர் ரயில் நிலையம் பெரியார் அண்ணா சிலைகள் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்களை திருப்பூர் தெற்கு தொகுதி எம்எல்ஏ க.செல்வராஜ் வரவேற்றார்.

இதில், தி.மு.க. துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா பேசும்போது,

"இந்தியாவுக்கு எதிரான போரை அமெரிக்கா நடத்துகிறது. அமெரிக்காவின் அமைச்சர் பீட்டர் நவரோவ், ஊடகங்களுக்கு பேட்டி தரும்போது, இந்தியாவுக்கு ஏன் அதிக வரி என்பது தொடர்பாக விளக்கம் அளித்தார். அதில், 'உக்ரைன் போரை மோடி நடத்துகிறார். பிராமணிய சுரண்டல் இந்தியாவில் நடைபெறுகிறது என்று அவர் தெரிவித்தார். இந்தக் கருத்தை அமெரிக்க அமைச்சர் சொல்கிறார்.

மன்மோகன் சிங் ஆட்சியில் கச்சா எண்ணெய் 108 டாலர் என்றபோதும் பெட்ரோல் விலை குறைவாக இருந்தது. ஆனால், இன்றைக்கு கச்சா எண்ணெய் விலை குறைவாக உள்ளபோது, பெட்ரோல், டீசல் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மோடி, அமித் ஷா ஆகிய 2 பேர் இந்தியாவை விற்கிறார்கள். அம்பானி, அதானி என்ற 2 பேர் வாங்குகிறார்கள்.

அமெரிக்காவின் அத்துமீறலை தடுக்க மறுப்பதன் காரணம் "சிலம்பை உடைத்து என்ன பயன்... அரியணையிலும் அதே கள்வன் தான்" என்று சிலப்பதிகாரத்தில் சொல்வது போல, வரியை போட சொன்னதே மோடிதான். இது தேசத்தின் மீது விதிக்கப்படும் போர்.

பாகிஸ்தான் போர் தொடுக்க உள்ளதாக அமெரிக்க உளவுத் துறை தெரிவித்ததால், நாங்கள் போர் தொடுத்தோம் என அமைச்சர் கூறுகிறார். பாகிஸ்தானுக்கு உதவி செய்பவர் ட்ரம்ப். இவ்வளவு நண்பனாகவும் எதிரியாகவும் ஒரு நபர் இருக்க முடியுமா?

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் நேர்மை மற்றும் தேசபக்திக்கு முன்பு, மோடியின் தேபக்தி கேவலமானது. ஒட்டுமொத்த வரி விதிப்பை ஏற்க முடியாது என்று அப்போதே அமெரிக்காவுக்கு எதிர்ப்பு தெரிவித்தார் அன்றைய பிரதமர் மன்மோகன் சிங். அதற்கு அவர் சொன்ன காரணம், 'ஒவ்வொரு துறை சாரந்த பொருள்களுக்கு வேண்டுமானால் வரி போட்டுக் கொள்ளலாம். ஒட்டுமொத்தமாக வரி விதிக்கக் கூடாது. அப்படி தனியாக பொருள்களின் மீது வரி போடும் போது, அதனை வேறு நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று' மன்மோகன் சிங் தெரிவித்தார்.

மோடி தேசபக்தி உள்ளவராக இருந்தால் மன்மோகன் சிங் சொன்னது போல, தனித்தனி பொருள்களுக்கு வரி என மாற்றி புதுக் கொள்கையை வரையறுக்க வேண்டும். அதே போல் சிறப்பு சலுகைகள் அடங்கிய திட்டத்தை கொண்டு வர வேண்டும். இதுபோன்ற மாற்றுத் திட்டங்களை கொண்டு வரும் வரை, மோடியை வரலாறு மன்னிக்காது." என்று தெரிவித்தார்.

# அமெரிக்க வரியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய அரசு துணை நிற்கும் என்கிறார் நிர்மலா



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள 50 வீத வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள வணிகர்களுக்கு மத்திய அரசு துணை நிற்கும் என்று இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், விரைவில் நல்ல செய்தி வெளியாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா 50 வீத வரி விதித்துள்ளதால், பொருளாதார ரீதியாக இந்தியாவுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதா என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த நிர்மலா சீதாராமன், கொரோனா போன்ற சந்தர்ப்பத்திலும் கூட தொழிலில் இருப்பவர்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக மத்திய அரசாங்கம் சிறப்புத் திட்டங்களை நடைமுறைப் படுத்தியதாகக் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், வெகு விரைவில், ஏற்றுமதி செய்யும் அனைவருக்கும் சிறப்பான அறிவிப்பு வரும் என்று இந்திய நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.





# சீனாவுடனான உறவுகள் சிறப்பாகவே உள்ளன

## ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவிப்பு

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குடனான தனது உறவுகள் சிறப்பாகவே உள்ளதாக, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

பெய்ஜிங்கில் இன்று நடைபெறவுள்ள பாரிய இராணுவ அணிவகுப்புக்கு முன்னதாக அவர்கள் இருவரும் நேற்று சந்தித்தனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த ரஷ்ய ஜனாதிபதி, ஜின்பிங் ஒரு அன்பான நண்பர் என்று வர்ணித்தார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பின்போது ரஷ்யா, சீனாவிற்கு எரிவாயு விநியோகத்தை அதிகரிக்கும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன், பெய்ஜிங் ரஷ்யர்களுக்கு விசா இல்லாத பயணத்தை வழங்கவுள்ளது.

இதேவேளை, வட கொரியாவின் கிம் ஜாங் - உன்னும் சீனாவுக்கு செல்கிறார்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜப்பானியர்கள் முறையாகச் சரணடைந்ததன் 80 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் சீனாவின் மிகப்பெரிய இராணுவ அணிவகுப்பைச் சீன ஜனாதிபதி நடத்துகிறார்.

# வெற்றி விழாவில் கலந்து கொள்ள கவச ரயிலில் சீனா சென்றார் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங்





சீனாவில் இன்று இடம்பெறவுள்ள வெற்றி விழாவில் கலந்து கொள்ள, வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் சீனத் தலைநகர் பீஜிங்கிற்கு சென்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் வெற்றி நாள் அணிவகுப்பில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் ஏனைய உலகத் தலைவர்களுடன் கிம் ஜாங் உன் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இது அவரது முதல் பலதரப்பு சர்வதேச சந்திப்பாகும்.

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தனது கவச ரயிலில் சீனாவிற்கு வந்துள்ளார்.

நேற்று பியோங்யாங்கிலிருந்து புறப்பட்டாலும் பலத்த பாதுகாப்பு காரணமாகத் ரயில் மெதுவாகப் பயணித்து, பீஜிங்கை வந்தடைந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1959 ஆம் ஆண்டுக்குப் பிறகு வட கொரிய ஜனாதிபதி ஒருவர் சீன இராணுவ அணிவகுப்பில் கலந்துகொள்வது இதுவே முதல் முறை. மியான்மர், ஈரான் மற்றும் கியூபாவைச் சேர்ந்த தலைவர்கள் உட்பட 26 நாட்டுத் தலைவர்களில் கிம்மும் ஒருவர்.

2015ஆம் ஆண்டு சீனாவின் கடைசி வெற்றி தின அணிவகுப்பில், பியோங்யாங் அதன் உயர் அதிகாரிகளில் ஒருவரான சோ ரியோங்-ஹேவை அனுப்பியதிலிருந்து அவரது வருகை மேம்படுத்தப்பட்டுள்ளது.

உலகத் தலைவர்களுடனான அவரது சமீபத்திய தொடர்பு புடினுடன் மட்டுமே இருந்தது, ரஷ்யா யுக்ரைன் மீது படையெடுத்ததிலிருந்து அவர் புடினை இரண்டு முறை சந்தித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அவர் கடைசியாக 2019 இல் பீஜிங்கிற்கு விஜயம் செய்தார்.

அந்தப் பயணத்திலும் அவர் ரயிலில் பயணம் செய்தார்.

தென் கொரிய செய்தி நிறுவனத்தின்படி, இந்தக் கவச ரயிலில் மாநாட்டு அறைகள், பார்வையாளர் அறைகள் மற்றும் படுக்கையறைகள் உட்பட சுமார் 90 பெட்டிகள் உள்ளன.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் முறையாகச் சரணடைந்ததன் 80 ஆவது ஆண்டு நிறைவையும், மோதலின் முடிவையும் குறிக்கும் அணிவகுப்பு நாளில், பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் பீஜிங்கின் வரலாற்றுச் சிறப்புமிக்க தியனன்மென் சதுக்கத்தில் அணிவகுத்துச் செல்வார்கள்.

70 நிமிட அணிவகுப்பில் நூற்றுக்கணக்கான விமானங்கள், தாங்கிகள் மற்றும் ட்ரோன் எதிர்ப்பு அமைப்புகள் உட்பட சீனாவின் சமீபத்திய ஆயுதங்கள் இடம்பெறும்.

அதன் இராணுவத்தின் புதிய படை அமைப்பு ஒரு அணிவகுப்பில் முழுமையாகக் காட்சிப்படுத்தப்படுவது இதுவே முதல் முறை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை எதிர்க்கும் பெரும்பாலான மேற்கத்திய தலைவர்கள் அணிவகுப்பில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையே புடினின் ஆட்சிக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

ஆனால் இந்தோனேசியா, மலேசியா, மியான்மர் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் தலைவர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

இது அண்டை நாடான தென்கிழக்கு ஆசியாவுடனான உறவுகளை மேம்படுத்த பீஜிங்கின் ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கு மேலும் சான்றாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை நேற்று அங்குரார்ப்பணம் செய்தார் ஜனாதிபதி

**(பா.சதீசன்)**

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நேற்று நண்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருடகாலம் பூர்த்தியாவதனை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகளை தொடக்கி வைக்க ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வடக்குக்கு விஜயம் செய்துள்ளார் .

நேற்று அவர் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து காலை புதுக்குடியிருப்பில் தென்னை முக்கோண வலயத்தினை ஆரம்பித்து வைப்பதற்கான நிகழ்வில் கலந்துகொண்டார். நண்பகல் 1 மணியளவில் வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

மிகநீண்டகால கோரிக்கையாக இருந்த வட்டுவாகல் பால நிர்வாகப் பணிகளை ஆரம்பிக்க வந்த ஜனாதிபதியை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் வரவேற்றார்.

தொடர்ந்து பால நிர்மாணப் பணிக்கான பெயர்ப்பலகையை ஜனாதிபதி திறந்து வைத்து மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், திலகநாதன், ஜெகதீஸ்வரன், ரவிகரன், மதகுருமார்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், தவிசாளர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.


















# வடக்குத் தொடர்பில் தேவையில்லாத அச்சத்தை ஏற்படுத்தும் அரசியல் ஒன்று தெற்கில் நடக்கிறது

## புதுக்குடியிருப்பில் வைத்து ஜனாதிபதி தெரிவிப்பு

(பா.சதீசன்)

வடமாகாணம் தொடர்பாக தேவையில்லாத அச்சத்தை ஏற்படுத்தும் அரசியல் ஒன்று தென்பகுதியில் நடக்கின்றது .

– இவ்வாறு நேற்று புதுக்குடியிருப்பில் வைத்துத் தெரிவித்தார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

புதுக்குடியிருப்பில் உலக தெங்கு தினக் கொண்டாட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நேற்று புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.

இதன்போது உரை நிகழ்த்திய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றுகையில் –

புதுக்குடியிருப்பு பகுதி என்பது கடந்த கால யுத்தத்தில் அதிகளவாகப் பாதிக்கப்பட்ட இடம். அதேபோல் மிகவும் கடினமான நிலையில் காணப்படும் பகுதியாகவே எமக்கு தெரியும். கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக அதிகளவானவற்றை நாம் இழந்து வாழ்கின்ற பகுதியாகதான் எங்களுக்குத் தெரியும்.

தமது உறவுகளை, பிள்ளைகளை, சொத்துக்களை, காணிகளை இழந்த இவ்வாறான பாரிய இழப்புக்களை சந்தித்த மக்கள் இங்கு வாழ்கின்றனர்.

கடந்த தேர்தலில் தேர்தல் கூட்டத்தில் மக்களைச் சந்தித்து கதைத்தேன். இழப்புக்களைச் சந்தித்த மக்களுக்கு மீண்டும் ஒரு புத்தெழுச்சியான வாழ்க்கையை பெற்றுக்கொடுப்பதற்கான தேவை எமக்கு இருக்கின்றது. இந்த பகுதியில் வாழும் மக்கள் புதியதொரு ஆட்சிமுறைக்கு தம் பங்களிப்பை செய்திருக்கின்றார்கள்.

நாம் முதலில் உங்கள் உரிமைகளை பாதுகாக்க வேண்டும். காணிகளின் உரிமை, தாய்மொழிமூலம் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளும் உரிமை, கலாசார உரிமை, காணாமலாக்கப் பட்டவர்களுக்கு என்ன நடந்தது என அறிந்துகொள்ளும் உரிமை இவை அனைத்தும் அடிப்படை உரிமைகளாக நாங்கள் பார்க்கின்றோம். ஆகவே இந்த உரிமைகளை முன்னெடுப்பதற்காக பல்வேறு திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

இரண்டாவதாக உங்கள் பொருளாதாரத்தை மேம்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும். கடந்தகால யுத்தம் காரணமாக பொருளாதாரம் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். ஆகவே சக்தி வாய்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவது அரசின் பொறுப்பு அதனை ஏற்க நாம் தயாராக இருக்கின்றோம்.

வடமாகாணத்தை மையமாக கொண்ட பொருளாதார வலயங்கள், சுற்றுலாத்துறை, விவசாயத் துறைக்குத் தேவையான நீர்ப்பாசன முறையை மேம்படுத்தல், அதே போனறு பொருளாதாரத்தை மேம்படுத்தும் மிக முக்கியமான துறையாகவே தென்னை பயிர் செய்கையை செய்ய அமைச்சு திட்டமிட்டிருக்கின்றது. 16,000 ஏக்கரில் தென்னை பயிர்ச்செய்கை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கின்றோம். இதில் 12,000 விவசாயக் குடும்பங்கள் இதில் பயன்பெறுவார்கள்.

கலாச்சார ரீதியாக எங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றோம். அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாட விளையாட்டுதுறையின் ஊடாக இந்த ஒற்றுமையினை ஏற்படுத்தத் தயாராக இருக்கின்றோம்.

அவநம்பிக்கை, சந்தேகத்தில் பார்ப்பது, ஆயுத முனையில் போராடியிக்கின்றோம். பலவருட காலமாக இது எமது நாட்டில் இடம்பெற்ற மிகக் கொடூரமான நிலையாகும். அதன் பலனாக மக்கள் பிரிந்து சென்றார்கள். இந்தச் சூழலில் இனவாத அரசியல் தலைதூக்கியது. வடக்கிலும், தெற்கிலும் அதிகாரத்தை தக்கவைத்து கொள்ள இனவாதத்தை பயன்படுத்தி கொண்டார்கள். அந்த நிலையைத் தான் மக்கள் தோற்கடித்து புதிய ஆட்சியை கொண்டுவந்தார்கள்.

இனவாத அரசியல் எந்தவொரு வகையிலும் சாதாரண மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தாது. வடக்கிலே இனவாதம் என்பது அரசியல்வாதிகளின் கருத்தாகும். தென்பகுதியில் மேலெழும் இனவாதமும் அரசியல் கருவியாக பயன்படுத்தப்படுகின்றது. தோல்வி கண்ட சக்திகள் திரும்ப எழுச்சி பெறுவதற்காக இந்த இனவாதத்தை பயன்படுத்துகின்றார்கள். அரசாங்கம் எனும் வகையில் இனவாதத்துக்கு இடமளிக்கப் போவதில்லை.

தென்பகுதியில் ஓர் அரசியல் வளர்ந்து கொண்டு வருகின்றது. தொடர்ந்து அவர்கள் வடமாகாணத்தில் இடம்பெறும் சம்பவங்களை கவனித்து வருகின்றார்கள். யுத்தம் தொடர்பான தேவையில்லாத அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றார்கள். கொழும்பு நகரில் ஆயுதங்கள் கண்டெடுக்கப்படுகின்றன. துப்பாக்கி சூடுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அதனை சாதாரண தன்மையாக சிலர் கூறுகின்றனர்.

வடக்கில் அவ்வாறே நடந்தால் அது யுத்தம் வருவதற்கான முன் சந்தர்ப்பமாக கருதுவார்கள். வடமாகாணம் தொடர்பாக தேவையில்லாத அச்சத்தை ஏற்படுத்தும் அரசியல் ஒன்று தென்பகுதியில் நடக்கின்றது. இவை அனைத்தையும் திட்டமிடுவது வடமாகாணத்தில் யுத்தம் வரும் என்ற அச்சத்தை ஏற்படுத்துவதற்காக. யுத்தம் வரும் சந்தர்ப்பத்தினை தடுப்பதற்காகவே எம் அரசியலை முன்னெடுத்து வருகின்றோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.



# வங்காலை பொலிஸ் சுற்றுலா விடுதியை திறந்து வைத்தார் பொலிஸ் மா அதிபர்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் வங்காலை பொலிஸ் நிலையத்தின் சுற்றுலா விடுதியை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இதன் போது பொலிஸ் மா அதிபருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.


இதன் போது வடமாகாண பொலிஸ் மா அதிபர், வன்னி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.















# முன்னேஸ்வரத்தில் தீ மிதிப்பு ஆரம்ப நிகழ்வு


(உடப்பு க.மகாதேவன்)

வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றுமான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் தீமிதிப்பு ஆரம்ப தீமூட்டும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

ஆலயக்குருக்கள் பிரம்மஸ்ரீ பத்மநாபக்குருக்கள் கலந்து கொண்டு, ஆலயத்தின் மூலஸ்தானத்திலிருந்து எடுத்து வரப்பட்ட தீ மூட்டப்பட்டது.இதில் பலர் கலந்து கொண்டனர்.























# தேற்றாத்தீவு பாலமுருகனுக்கு சங்காபிஷேகம்!

(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட தேற்றாத்தீவு பால் மணல்மேடு அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு பாற்குட பவனியும், சங்காபிஷேகமும் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

மஹா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து கடந்த 12 தினங்களாக ஆலயத்தில் மண்டலாபிஷேகம் நடைபெற்று வந்த நிலையில் அதன் பூர்த்தியை முன்னிட்டு தேற்றாத்தீவு வடபத்திர காளியம்மன் ஆலயத்திலிருந்து ஆயிரக்கணக்கான அடியார்கள் பங்குகொள்ள பாற்குட பவனி நடைபெற்றது.

பாற்குடப் பவனியானது ஆலயத்தினை வந்தடைந்ததுடன் பாற்குடங்கள் கொண்டு பாலமுருகனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1008 சங்குகளுக்கும், பிரதான கும்பங்களுக்கும் விசேட பூஜைகள் நடைபெற்று பிரதான கும்பம் கொண்டு செல்லப்பட்டு முருகப்பெருமானுக்கு அபிஷேகம் செய்யப்பட்டதுடன் சங்குகள் கொண்டும் அபிஷேகம் செய்யப்பட்டது.

# அரசியல் கைதி அரவிந்தன் பிணையில் விடுவிப்பு



(பா.சதீசன்)

முன்னாள் அரசியல் கைதியும், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவருமான ஆனந்தவர்மன் எனப்படும் அரவிந்தன், கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றையதினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கும் வகையில் முகநூலில் பதிவுகள் இட்டார் எனத் தெரிவித்து 2024 மார்ச் மாதம் அவர் கைது செய்யப்பட்டார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் முகநூல் பதிவு தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

முன்னதாக, அவர் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக அரசியல் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நீதிமன்ற உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன்பின்னர், வவுனியாவில் வசித்து வந்த அவர், போராளிகள் நலன்புரிச் சங்கம் என்ற அமைப்பின் மூலம் செயல்பட்டு வந்தார்.

இந்நிலையில், மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவர் நேற்று ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீர பிணையில் பயணத் தடை விதிக்கப்பட்டு, பல நிபந்தனைகளின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளார்.





# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தின நிகழ்வுகள் மட்டக்களப்பில்!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பில் ஒல்லாந்தர் கோட்டையில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தின நிகழ்வுகள் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் பங்கு பற்றுதலுடன் பிரதி பிராந்திய இணைப்பாளர் திருமதி யதுசியா முரளி தலைமையில் நேற்று இடம் பெற்றது.

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் அலுவலகத்தில் தீபமேற்றி நினைவு கூரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.










# ஈஸ்டர் தினத் தாக்குதல் சதிகளின் உச்ச வடிவம்

**ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய சிங்களத்தில் எழுதிய 'ஈஸ்டர் தின தாக்குதல்' நூல் தமிழில் செல்லையா மனோரஞ்சனினால் மொழி பெயர்க்கப்பட்டு, அதன் அறிமுக நிகழ்வு வரும் சனிக்கிழமை, 6 ஆம் திகதி பிற்பகல் 3:30 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் திருநாவுக் கரசு (சுகு) சிறிதரன் தலைமையில் நடைபெற இருக்கின்றது. அதை ஒட்டி இந்த அறிமுகம் இங்கு பிரசுரமாகின்றது**

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்" – இலங்கையில் பல தசாப்தங்களாக உருச் சிதைவடைந்து வந்த அரசு இயந்திரம் பற்றி இந்நூல் பேசுகிறது.

1977 க்குப் பின்னர் 42 ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்த வதைகள், சதிகளின் உச்ச வடிவமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது உண்மையில் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடியதொரு கொடூரமான குற்றச் செயலாகும். இந்தப் புத்தகமானது கீழே தரப்பட்டுள்ள பல்வேறு விடயங்களை ஆதாரமாகக் கொண்டும், தற்போது பலராலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களையும், இன்னமும் வெளிப்படுத்தப்படாமல் இருக்கும் முக்கியமான விடயங்களையும் சேர்த்து ஒரு தொகுப்பாகக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்டதொரு முயற்சியாகும்.

அதாவது, இந்தக் கொடிய குற்றத்திற்கு வழிவகுத்த நிகழ்வுகளின் தொடர் என்பது, குற்றத்தைத் தடுப்பதற்கான வாய்ப்புகளைத் தவற விடுதல், தாக்குதலுக்காகத் திட்டம் தீட்டப்படுதல்,

தொடர்ச்சி▼



# ஈஸ்டர் தினத் தாக்குதல் சதிகளின் உச்ச வடிவம்

தொடர்ச்சி▲

கண்களுக்கு புலப்படாது அமைந்திருக்கும் ஆழ் அரசின் தொடர்பு, அச்சம்பவம் குறித்து ஏற்கனவே அறிந்திருந்தும் வேண்டுமென்றே அதனை நடக்க விட்டு வேடிக்கை பார்த்தல்உட்பட, இந்தத் தாக்குதலுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் உண்மையை வெளிக்கொண்டு வருதல் என்பது மட்டுமன்றி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்க வேண்டிய நீதியை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றை வெளிக்கொண்டு வருதல் என்பதுடனும் தொடர்பானது.

இலங்கையில் ஒரு ஆழ அரசு உருவாகி இருப்பது பற்றியும், மனித முகம் கொண்ட அரசாங்கங்கள் விதிவிலக்காக உருவானாலும் இதன் இருண்ட கரங்கள் அரச சமூக மட்டத்தில் பிசாசுகளின் கைகள் போல மீண்டுள்ளது.

சித்திரவதைகளையும், சதிகளையும், ஊழலையும் ஒரு கலாசசாரமாகவே ஊடுருவச் செய்துள்ளது.


காணாமல் போகச் செய்தல், படுகொலைகள், அரச பயங்கரவாதம், சமூக பயங்கரவாதம் என்பன தோற்றம் பெறுவதில் நாட்டின் பேரழிவில் பாரதூரமான பாத்திரத்தை இது வகித்துள்ளது.

ஆழ அரசாக உருவாகி இருக்கும் இந்த அரச இயந்திரத்தின் அழுகிய பகுதி சுத்தம் செய்யப்படாமல் இலங்கையில் ஜனநாயக மனித உரிமை மறுமலர்ச்சியை நிகழ்த்துவது சவாலான பணியாகவே இருக்கும்.

வதைகள், சூழ்ச்சிப் படுகொலைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட அரச எந்திரச் சிதைவு கட்டமைப்பு ஜனநாயகத்தின் தூண்கள் எனச் சொல்லப்படும் நீதித்துறை, சட்டவாக்கம் மாத்திரமல்ல சமூக பாதுகாப்பு, மனித உரிமை, ஜனநாயக உரிமை விடயங்களில் பாரதூரமான சிதைவை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இலங்கையர்களின் வாழ்வை கண்ணியமானதாக மாற்றுவதற்கு இந்த இருண்ட பக்கத்தின் மீது

தொடர்ச்சி▼



# ஈஸ்டர் தினத் தாக்குதல் சதிகளின் உச்ச வடிவம்

தொடர்ச்சி▲

வெளிச்சம் பாய்ச்சப் பட வேண்டும். அது சுத்திகரிக்கப் பட வேண்டும் நாடு பூராவும் அதிர்ச்சியில் உறைந்து போக வைத்த தேவாலயங்கள், ஹோட்டல்கள் மீதான குரூரமான தாக்குதல்கள் இந்த ஆழ அரசு எவ்வளவு நோய்கண்டதாக அமைகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். 400க்கு மேற்பட்ட மனித உயிர்கள் சில கணங்களில் நாடு பூராவும் காவு கொள்ளப்பட்டன.

இத்தகைய படுகொலைகளையும் வதைகளையும் மூலதனமாக்கி அதிகாரத்தை அடையும் வர்க்கம் ஒன்று இலங்கையில் உருவாகி இருக்கிறது.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து தொழிலாளர் விரோத, இனவிரோத செயற்பாடுகள் ஊடாகவே இந்த நாட்டின் அவல சரித்திரம் எழுதப்பட்டு வந்திருக்கிறது.

சுதந்திரம் பெற்ற 76 ஆண்டுகளில் 35 ஆண்டுகளுக்கு மேலான காலம் யுத்தம், பேரழிவு என்றாகியது.


இப்போது உண்மைகளை கண்டறிய வேண்டிய தருணம் – தென்னாபிரிக்காவில் நிகழ்ந்தது போல.

புதைக்குழிகள், காணாமல் போதல், பயங்கரவாத தடைச் சட்டம், இராணுவ மயமாக்கல், சிறுபான்மைச் சமூகங்களின் மீதான நில, கலாச்சார, பொருளாதார ஆக்கிரமிப்புக்கள், திட்டமிட்ட இன மோதல்கள் எல்லாவற்றிற்கும் விடையை தேட வேண்டிய தருணம் இது.

திரு சுனந்த தேசபிரிய அவர்களின் இந்நூல் இந்த நாட்டில் அற விழுமியங்களின் வீழ்ச்சியின் வேர்களை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மூலம் வெளிக்கொண்டுவர முயல்கிறது.

சிங்கள மொழியில் எழுதப்பட்ட 370 க்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்ட இந்நூல் தமிழில் செல்லையா மனோரஞ்சன் அவர்களால் சிறப்பாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இது காலத்தின் அவசியம். புதிய தலைமுறை கற்றுணர வேண்டியது.

மனித முகம் கொண்ட இலங்கையை உருவாக்குவதற்காக இலங்கை அரசின் அரச இயந்திரத்தின் உண்மையான முகத்தை தரிசிக்க வேண்டியமை மிக மிக அவசியமாகிறது.



# இன்றைய ராசி பலன்கள் -03.09.2025



**மேஷம்**

இன்றைய நாள் சுமூகமாகச் செல்லும். நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

பணியிடத்தில் உங்களுக்கு இனிமையான ஆச்சரியங்கள் காத்திருக்கும்.நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். கிடைக்கும் பணத்தை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



**ரிஷபம்**

உங்கள் கடின முயற்சி மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

உங்கள் உறுதி மற்றும் நேர்மை காரணமாக உங்கள் பணிக்கு நல்ல பெயர் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களை கலந்து ஆலோசிப்பீர்கள்.

கடன்கள் மூலம் சில பண வரவு காணப்படும். இதன் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.



**மிதுனம்**

இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப்படும். நீங்கள் இன்றைய நாளை புதிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள பயன்படுத்தலாம். பொது நிகழ்ச்சிகள் மற்றும் விருந்துகளில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். உங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமையை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தால் லாபமும் பயனும் அடைவீர்கள்.

ஆரோக்கியத்தைப் பொருத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.



**கடகம்**

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. சில சூழ்நிலைகள் உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும். மகிழ்ச்சியாக இருக்க முயலவும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

இன்று உங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. எனவே எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் தேவைகளுக்கு கடன் கூட வாங்குவீர்கள்.

சளி சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு காணப்படும். பிரார்த்தனை மேற்கொள்வது சிறந்தது.



**சிம்மம்**

நீங்கள் அறிவு பூர்வமாகச் செயலாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இன்றைய நாள் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில்தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.

ஒவ்வாமை காரணமாக சளி இருமல் போன்ற தொல்லைகள் காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்ப்பது நல்லது.



**கன்னி**

இன்று சிறப்பாக நாளாக அமையும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். சகஜமான அணுகுமுறை மூலம் எளிதாக இலக்கை அடையலாம்.

உங்கள் பணியில் சிறந்த வெற்றி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எந்த விடயத்தையும் புது முறையில் ஆற்றுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் மகிழ்ச்சியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

கணிசமான பண வரவின் காரணமாக இன்று மறக்க முடியாத நாளாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் சேமிப்பதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று நீங்கள் சிறந்த முறையில் ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.



**துலாம்**

நம்பிக்கையும் மன உறுதியும் இன்று மிகவும் அவசியம். தைரியமின்மையால் பிரச்சினைகள் உருவாகும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணிகளை மேற்கொள்ளும் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கவனமுடம் பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். இது கோபமாக வெளிப்படும். இதனை உங்கள் துணையிடம் வார்த்தையில் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிப்படையும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் உங்கள் பணச் சுமை அதிகரிக்கும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.



**விருச்சிகம்**

ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் அளிக்கும். புத்திசாலித்தனமாக யோசிப்பது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் வளர்ச்சி காண உகந்த நாள் அல்ல. குறித்தநேரத்தில் பணிகளை முடிக்கும் உங்கள் திறமைகளைக் குறைக்கும் வகையில் சில தடைகள் ஏற்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மிகுந்த உணர்சிவசப்படுவீர்கள்.சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. ஆன்மீக நோக்கத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

அதிக நீரைப் பருகி உங்களை ஆரோக்கியமாக வைத்திருங்கள். இதனால் வயிற்று உப்பசம் சீராகும்.

# இன்றைய ராசி பலன்கள் -03.09.2025




எந்த ஒரு செயலையும் ஒன்றுக்கு இரண்டு தடவை யோசித்துச் செயல் பட வேண்டும் உங்கள் வார்த் தைகளில் கவனம் தேவை. மனதில் குழப்பம் வேண்டாம். பிரார்த்தனை மூலம் வெற்றி கிடைக்கும்.

இன்று பணியில் வெற்றி காண பது அரிது. பணியை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிடல் அவசியம்.

மனக் குழப்பம் காரணமாக உறவின் நல லிணக்கம் பாதிக்கும். காரணமேயில்லாமல் உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் செய்ய நேரும்.

இன்று பண விரயம் காணப்படும்.செல வுகளை கட்டுபடுத்த முடியாது. கவனமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக் காது. பல் வலி காணப்படும். கண்களுக்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

இன்று புதிய பணி வாய்ப்புகள் உங்களுக்கு அதிக திருப்தியை அளிக்கும். சாதித்த உணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க இது ஏற்ற நாள். இதனால் உறவில் மகிழ்ச்சி யும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். ஊக்கத்தொகை வகையில் இன்று பண வரவைக் காணலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




எதிர்காலம் பற்றிய எண் ணங்கள் உங்கள் மனதில் ஓடும். இது அனைவரிடத்திலும் காணப்படும். முக்கியமான செயல்கள் செய்வதற்கு இன்று ஏற்ற நாள்.

பணிகளை எளிதாக மேற்கொள் வீர்கள். பணிகளை சமூகமாகக் கையாள்வீர் கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறை யில் நடந்து கொள்வீர்கள். இதனால் உற வின் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக் கும். திருப்திகரமான நிலை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி நிலவும்.




வாக்குவாதங்கள் ஏற்படும் என்பதால் உரையாடுவதற்கு முன் கவனம் தேவை. சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை துல்லி யமாகவும் தரத்துடனும் மேற் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். நட்பான அணுகு முறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்துங் கள். சளி. முதுகுவலி போன்ற உபாதை- தகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற் கொள்வது சிறந்தது.

# ஜே.வி.பியினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



ஜே.வி.பியினால் 1970 மற்றும் 80 ஆம் ஆண்டுகளில் பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டமைக்கு எதிராக எதிர்வரும் அரசாங்கத்தின் கீழ் பொருத்தமான சட்ட நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

1971 மற்றும் 88-89 காலகட்டங்களில் ஜே.வி.பி பல பொதுச் சொத்துக்களை அழித்ததாக அவர் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த விடயத்தில், பேருந்துகள், மின்மாற்றிகள், தொலைத் தொடர்பு கோபுரங்கள் உள்ளிட்ட பல பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டதுடன், வங்கிக் கொள்ளைகளும் இடம்பெற் றுள்ளன.

இது தொடர்பான முறைப்பாடுகளும் அளிக்கப்பட்டுள்ள துடன், அதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

இந்த உண்மைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, பொதுச் சொத்துக்களை அழிப்பதில் ஈடுபட்ட ஜே.வி.பியின ருக்கு எதிராக எதிர்கால அரசாங்கத்தில் பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் சட்டம் செயல்படுத்தப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் ரணசிங்க பிரேமதாச ஆகியோர் ஜேவிபிக்கு மன்னிப்பு வழங்கிய போதிலும், அவர்கள் தற்போது அரசியல் பழிவாங் கலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் பல எதிர்க்கட்சிகள் அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளன.

அதன்படி, எதிர்கால அரசாங்கத்தின் கீழ் ஜே.வி.பிக்கு எதிராக சட்டம் நிச்சயமாக செயல்படுத்தப்படும்." என்று தெரிவித்துள்ளார்.